

# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# Annual Report
# 2019

## තල් සංවර්ධන මණ්ඩලය
## பனை அபிவிருத்திச் சபை
## Palmyrah Development Board

වැවිලි අමාත්‍යාංශය - பெருந்தோட்ட அமைச்சு - Ministry of Plantation

# வருடாந்த அறிக்கை 2019

**உள்ளடக்கம்** | **பக்க இல.**


**(அ) தோற்றப்பாடு செயற்பாடு**

* பனை அபிவிருத்திச் சபை 01
* எமது நோக்கங்களும் இலக்குகளும் 02
* தலைவரின் அறிக்கை. 03
* பொது முகாமையாளரின் அறிக்கை 04
* பணிப்பாளர் சபை. 05
* கணக்காய்வு மற்றும் முகாமைக்குழு. 06
* நிறைவேற்று முகாமைத்துவம். 06
* கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள் 07
* பனை வளம் 08

**(ஆ) செயல்திறன் தந்திரோபாயம் மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான பார்வை**

* வியாபார நடைமுறைகளை அறிக்கையிடல் 09 - 24
  - ✓ அபிவிருத்தி பிரிவு 09-11
  - ✓ விரிவாக்கல் பிரிவு 12-13
  - ✓ நிர்வாகப் பிரிவு 14-17
  - ✓ திட்டமிடல் பகுதி 17
  - ✓ உற்பத்திப் பிரிவு 18-19
  - ✓ சந்தைப்படுத்தல் பிரிவு 20
  - ✓ ஆராய்ச்சிப் பிரிவு 21-24
* செயற்பாட்டுப் பெறுபேறுகளின் மீளாய்வு. 25
* நிதியியல் மீளாய்வு. 25
* ஆபத்து முகாமைத்துவம். 26
* உத்திகள். 26
* மனித மூலதனம். 27
* சூழல் பற்றிய அறிக்கையிடல். 27

**(இ) நிறுவன ஆளுகை**

* நிறுவன ஆளுகை 27
* பணிப்பாளர் சபைக்கூட்டங்கள். 27
* கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு 27
* கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை. 27-28
* உள்ளகக் கட்டுப்பாடு. 28
* முகாமைத்துவம். 28
* பிறவிடயங்கள். 28-29

**(ஈ) குறிப்பிடத்தக்க கணக்கியற் கொள்கைகள்.**

1.0 பொது கணக்கு கொள்கைகள். 30
2.0 சொத்துக்களும் அவற்றின் பெறுமதியின் அடிப்படையும் 30
3.0 பொறுப்புக்களும், ஒதுக்கங்களும். 31
4.0 வருமான கூற்று 32
5.0 காசுப் பாய்ச்சல் 32
6.0 அரசாங்க நிதியீட்டம் 32

**(உ) நிதியியற் கூற்றுக்கள் – வெளிப்படுத்தல்கள்.**

* ஐந்தொகை 33
* நிதி நிலை மாற்றங்கள் பற்றிய கூற்று. 34
* நிதிச் செயற்பாடுகள் பற்றிய கூற்று. 35
* நிதி நிலை மாற்றங்கள் பற்றிய கூற்று 36
* பாதீட்டு ஒப்பீட்டு அறிக்கை 37
* கணக்குகளுக்கான குறிப்புகள். 38-61

**(ஊ) தேசிய கணக்காய்வாளரின் அறிக்கை** 62-70

(அ) தோற்றப்பாடு செயற்பாடு

# பனை அபிவிருத்திச் சபை.

பனை அபிவிருத்திச் சபையானது 1971ம் ஆண்டின் 46ம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட 1975ம் ஆண்டின் 24ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 18ம் திகதி ஆவணி மாத 1978ம் ஆண்டின் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மேலதிக தோட்டப் பயிர்ச் செய்கை அமைச்சின் கீழ் பனைசார் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கென யாழ்ப்பாணத்தை தலைமை அலுவலகமாக கொண்டு உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். 2015ம் ஆண்டின் தை மாதம் 08ம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தற்போது தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றது.







**தலைமை அலுவலகம்**
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 2222034
தொலைநகல்: 021 2224154

மின்னஞ்சல்: slpdbho@yahoo.com
இணையத்தளம்: www.pdb.gov.lk

## ஏமது நோக்கங்களும் இலக்குகளும்.

சபையின் இலக்குகளும் நோக்கங்களும் பின்வருமாறு:-

- பனையை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாட்டிற்கு உதவத்தக்க நிறுவன ரீதியான அடித்தளத்தை வழங்குதல்.
- இலங்கையில் பனையை அடிப்படையாகக் கொண்ட தொழில் துறையின் நிலையான அபிவிருத்திக்கு நுண்ணிய, மத்தியதர, உயர்தொழில்நுட்ப மட்டங்களில் விஞ்ஞான ரீதியான சிறந்த அடித்தளத்தை ஏற்படுத்துதல்.
- அடிப்படை உத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப அபிவிருத்திக்கு வழிகாட்டத்தக்க பிரயோக ஆய்வுகள் மூலமாக பனைப்பயிரின் பாதுகாப்பு, பேணுகை,உற்பத்தி, அபிவிருத்தி என்பனவற்றுக்கான தொழில்நுட்பமுறைகளை அபிவிருத்தி செய்தல்.
- ஒன்றிணைந்த அபிவிருத்தி முயற்சிகளை நோக்கமாகக் கொண்டு பனை மற்றும் கால்நடை அபிவிருத்தி என்பனவற்றினை மேம்படுத்தல்..
- பனை அபிவிருத்திச் சபையின் மூலம் உருவாக்கப்படும் தொழில்நுட்பமுறைகளை இத்துறைசார்ந்து தங்கியிருப்போருக்கும் தொழிலதிபர்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் வண்ணம் இடம் மாற்றுதல்.
- பனை உற்பத்திக்குரிய வளங்களின் தேசிய களஞ்சியமாகச் செயற்படுதலும், பயிரிட உதவும் உபகரணங்களை சிறந்த முறையில் தயாரித்தலும்.
- பனை தொடர்பான தொழில்நுட்பத் தகவல்களை நடைமுறைப் பிரயோகங்களுக்கேற்ப பிரசித்தி பெற்ற விளக்கங்களோடு ஒப்பிடுதலும் பரப்புதலும்.
- பனையுடன் தொடர்பான நிறுவனரீதியான அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றின் ஊடாக உற்பத்தி முறைகளின் முகாமைத்துவத்தில் பல்வேறு தெரிவுகளை மேம்படுத்தலும் கிடைக்கச் செய்தலும்.

## தலைவரின் செய்தி



இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் 2019ம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் எனது செய்தியை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். எமது சாதனை பயணத்தின் முக்கிய ஆண்டாக இவ்வாண்டு அமைகின்றது. குறிப்பாக எமது சிறந்த ஆழுமை நிறைந்த நிலையான நல்லாட்சியை மையமாக கொண்டு நீடித்த அபிவிருத்தியை நோக்கிய செயற்பாட்டில் சிறப்பான முகாமை கட்டுப்பாட்டின் கீழ் நடைமுறைப்படுத்த முடிந்தது.

பனை அபிவிருத்திச் சபையின் மூலோபாய ரீதியான சந்தைப்படுத்தல் திட்டமானது எமது மூலோபாய திட்டத்துடன் இணைந்ததான நீண்ட நிலையான வளர்ச்சிக்கு உதவும். அதனடிப்படையில் எமது கற்பக விற்பனை நிலையங்கள் எதிர்காலத்தில் நீர்கொழும்பு, கண்டி, அனுராதபுரம் மற்றும் இலங்கையின் தென்பகுதியில் அமைக்கப்பட்டு சந்தைப்படுத்தும் செயற்பாட்டை விரிவாக்கும் முயற்சியில் ஈடுபட எதிர்பார்த்துள்ளோம். இதற்கு மேலதிகமாக அரச தனியார் துறைகளுடன் இணைந்து எமது உற்பத்திகளை அவர்களிற்கூடாக சந்தைப்படுத்தலை மேற்கொண்டு விற்பனையை அதிகரிக்கச் செய்வதுடன் வெளிநாட்டு சந்தையை மையமாக கொண்ட ஏற்றுமதியாளர்களை இனங்கண்டு அவர்களையும் ஊக்குவித்து இச்செயற்பாட்டில் பங்குதாரர்களாக மாற்றி எமது இலக்கு நோக்கிய பயணத்தை தொடரவுள்ளோம்.

அடுத்ததாக எமது முக்கிய குறிக்கோள்களில் பனையை நம்பி வாழும் குடும்பங்கள் மற்றும் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்களின் அபிவிருத்தியில் முக்கிய கவனம் செலுத்தி அதிகரித்து வரும் பனை சார் உற்பத்தி பொருட்களின் கேள்வியை ஈடுசெய்யும் முகமாக எமது அமைச்சின் நிதி பங்களிப்பு மற்றும் வழிகாட்டலுடன் எமது சபையானது ஒரு வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

சபையின் ஆராய்ச்சி பகுதியானது தனது ஆராய்ச்சி செயற்பாட்டை சிறப்பான முறையில் செயற்படுத்தி புதிய தொழில்நுட்பங்களையும் புதிய உற்பத்திகளையும் இனங்கண்டு தொழிலில் ஈடுபடும் மக்களிற்கு ஆலோசனை வழிகாட்டல் சேவைகளை வழங்கும் அதே வேளை பல பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து பல ஆய்வுகளை மேற்கொண்டு தற்போதய போட்டி நிறைந்த சந்தையின் தேவைக்கு ஏற்ப எமது தொழிலை விரிவுபடுத்துவதற்கான வாய்பினை தொழில்முனைவோரிற்கு அடையாளப்படுத்த இவ்வாண்டு செயற்படுத்தப்பட்டது.

மேலும் எந்த ஒரு நிறுவன வளர்சியிலும் மிக முக்கிய பங்குவகிப்பது அந்நிறுவனத்தின் மனித வளமாகும் அந்த வகையில் ஊழியர்கள் தமது ஆற்றல் செய்திறன் வெளிப்பாட்டை மேலும் வெளிப்படுத்தவும் திறன்களை மேம்படுத்து அதே வேளை எமது குறிக்கோளை நோக்கிய எம்மை வழிநடாத்தி செல்ல உதவும் என்பதனை திடமாக நம்புகின்றோம்.

இந்த சாதனை பயணத்தை நோக்கிய பாதையில் எமக்கு சிறந்த ஆதரவினை வழங்கிய எமது இயக்குனர் சபை உறுப்பினர்கள் மதிப்புக்குரிய வாடிக்கையாளர்கள், எமது சபை உத்தியோகத்தர்கள், பங்குதாரர்களிற்கும் மேலும் குறிப்பாக எமது மதிப்புரிய அமைச்சர் மற்றம் அமைச்சின் செயலாளரிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எதிர்காலத்திலும் எமது நாட்டின் அரசாங்கம் அதன் பங்குதாரர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் பேராதரவுடன் எமது பனை அபிவிருத்திச் சபையானது எதிர்காலத்தில் எமது குறிக்கோளை அடையும் முகமாக பல்வேறு உபாயங்களையும் சிறந்த வழிமுறைகளையும் கையாண்டு தொடர்ந்து பயணிக்க அனைவரது ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என நம்புகின்றேன்.

ஆ.ந.இராஜேந்திரன்,
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

## பொது முகாமையாளரின் செய்தி



பனை அபிவிருத்திச் சபையானது 1971ம் ஆண்டின் 46ம இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட 1975ம் ஆண்டின் 24ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 18ம திகதி ஆவணி மாத 1978ம் ஆண்டின் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மேலதிக தோட்டப் பயிர்ச் செய்கை அமைச்சின் கீழ் பனைசார் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கென யாழ்ப்பாணத்தை தலைமை அலுவலகமாக கொண்டு உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். 08 தை 2015ம ஆண்டின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தற்போது தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

2019ம் ஆண்டில், பனை அபிவிருத்திச் சபையின் மொத்த இலாபம் ரூபா 8.914 மில்லியனால் அதிகரித்துள்ளது. இந்த முன்னேற்றத்தின் முக்கிய வகிபாகமாக சந்தைப்படுத்தல் மூலம் பெறப்பட்ட ரூபா 43.38 மில்லியன் பங்களிப்பு செய்கின்றது. அதே சமயம் நடப்பாண்டில் பனை அபிவிருத்திச் சபை நடாத்திய கைப்பணிப் பயிற்சிகளால் பயிற்சி பெற்ற கிட்டத்தட்ட 800 கிராமப் பெண்கள் மூலம் ரூபா 61.30 மில்லியன் ஈட்டப்பட்டது. பனந் தோட்டங்களை புனரமைக்கும் நோக்கில் பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஆதரவுடன் 381,000 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டது. பனை அபிவிருத்திச் சபையினால் உற்பத்தி செய்யப்படும் பனை சார் பொருட்களின் வருடாந்த உற்பத்தி மதிப்பு ரூபா 17.72 மில்லியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையினால் நடாத்தப்படும் பயிற்சித் திட்டங்களை மேம்படுத்தும் வகையில் கைதடியில் ஆரம்பிக்கப்படவுள்ள பனை வளம் சார் பயிற்சி நிறுவகத்திற்கான (Palmyrah Resource based Training Institute) கட்டிடப் பணிகள் படிப்படியாக நடைபெற்று வருகின்றது.

பனை ஆராய்ச்சி நிறுவனத்தால் கிட்டத்தட்ட 14 ஆராய்ச்சி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது, 9 வெளியீடுகள் பிரசுரங்களில் வெளியிடப்பட்டுள்ளன. பயிற்சிப் பட்டறை நிகழ்வுகள், கள விஜயங்கள் மற்றும் பயிற்சிகள் உட்பட்ட 16 வெளியாருக்கான செயற்பாடுகள் பனை ஆராய்ச்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒப்பீட்டளவில் சபையானது 216 பணியாளர்களைக் கொண்ட ஓர் சிறிய நிறுவனமாக இருந்தாலும், பணியாளர்களின் கடின உழைப்பு மற்றும் ஒத்துழைப்புடன் பல்வேறு துறைகளில் (சந்தைப்படுத்தல், விரிவாக்கம், உற்பத்தி, நிர்வாகம் மற்றும் ஆராய்ச்சி) குறிப்பிடத்தக்க மாற்றத்தை எங்களால் அடைய முடிந்துள்ளது.

பனை அபிவிருத்திச் சபை பணியாளரின் திறன் மேம்பாட்டிற்கு பல வெற்றிகரமான பயிற்சிகள் நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பாக இவ்வாண்டு சகல பணியாளர்களுக்கும் தடை தாண்டல் பரீட்சை நடாத்தப்பட்டது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துவற்கான தொழில்நுட்ப முன்மொழிவுகள் அமைச்சிற்கு சமர்ப்பித்து, அவை மாவட்ட செயலகங்கள் ஊடாக செயற்படுத்தப்பட்டது. உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்களுக்கு உற்பத்தி உபகரணங்கள் வழங்கப்பட்டது. பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட மட்ட நிர்வாகத்தை வலுப்படுத்தும் வகையில் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் மாங்குளத்தில் வட மாகாண சபை கட்டிடத்தில் திறந்து வைக்கப்பட்டது. உற்பத்தி நிலையங்களின் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் தயாரிப்புகளின் உற்பத்தி திறன் மற்றும் தர மேம்பாட்டிற்கு உற்பத்திப் பகுதி பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் சபைக்கு வழங்கிய ஆதரவிற்காக நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம்.பி.லோகநாதன்,
பொது முகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை.

## பணிப்பாளரின் அறிக்கை

### பொதுவான.

பனையுடன் தொடர்பான உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதோடு சமூக மேம்பாட்டையும் மேற்கொள்ளும் ஒரே அரச நிறுவனம் இதுவாகும்.

பிரதான காரியாலயம், யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றது. பிராந்தியக் காரியாலயங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இயங்குகின்றன. கொழும்பில் இயங்கும் நகரக் காரியாலயம், பிராந்தியக் காரியாலயங்கள், அமைச்சு, திறைசேரி மற்றும் ஏனைய முக்கிய நிறுவனங்கள் என்பனவற்றை இணைக்கும் காரியாலயமாக செயற்படுகின்றது.

### எதிர்காலத் திட்டங்கள்.

சபையினால் செயற்படுத்தப்பட்ட தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை தொழிற் பயிற்சிக்கு உதவும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அரச நிறுவனங்களின் உதவியோடு முன்னெடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

## சபையின் தலைவரும் பணிப்பாளர்களும்.- 2019

1. திரு. அ.ந.இராஜேந்திரன் - தலைவர், பனை அபிவிருத்திச் சபை.
2. திரு. எம்.புவிராஜ் (திறைசேரி) - பணிப்பாளர்
3. திருமதி. சசிதேவி ஜலதீபன - பணிப்பாளர்
4. திரு. செல்வின் இறேனியஸ் மரியாம்பிள்ளை - பணிப்பாளர்
5. திரு. வி.பாலகிருஷ்ணன் - பணிப்பாளர்
6. திருமதி. இறஞ்சிதமலர் மோகனேஸ்வரன் - பணிப்பாளர்

## கணக்காய்வு முகாமைத்துவம்

1. திரு. எம்.புவிராஜ் (திறைசேரி) - பணிப்பாளர்
2. திருமதி. சசிதேவி ஜலதீபன் - பணிப்பாளர்
3. திரு. செல்வின் இறேனியஸ் மரியாம்பிள்ளை - பணிப்பாளர்

## நிறைவேற்று முகாமைத்துவம்.

| பதவி | பெயர் | தொ.பேசி | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| பொது முகாமையாளர் | திரு. எம்.பி.லோகநாதன் | 0777176322 | mblogan_cro@yahoo.com |
| பிரதிப் பொது முகாமையாளர் | திரு. ஆர்.ராமேஸ்வரன் | 0777317136 | ramanahmba@yahoo.com |
| முகாமையாளர் (நிதி) | திரு. வி.பி.தேவராசா | 0777299386 | vptheva@yahoo.com |
| முகாமையாளர் (விரிவாக்கல்) | திரு. கா.கோபாலகிருஸ்ணன் | 0773620584 | gkrishnan810@gmail.com |
| முகாமையாளர் (பிரயோக ஆராய்ச்சி) | திரு. எஸ்.சிறீவிஜேந்திரன் | 0779966601 | srthyln@yahoo.com |
| முகாமையாளர் (நிர்வாகம் & மனிதவளம்) | திரு. ஜி.கே.வகாலதந்திரி | 0712185399 | geethkw2009@yahoo.com |
| முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) | திரு. பா.சுதாகரன் | 0766688337 | sbsuthaharan@yahoo.com |
| முகாமையாளர் (உற்பத்தி) | திருமதி. எஸ்.ஜனார்த்தனன் | 0773787380 | sumithira79@yahoo.com |
| முகாமையாளர் (அபிவிருத்தி) | திரு. பா.ரஜிபரன் | 0778800660 | rajeev800@yahoo.com |
| உள்ளகக் கணக்காய்வாளர் | திரு. நெ.சிவராஜா | 0773779614 | sivarajah21@gmail.com |

# கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | பனை அபிவிருத்திச் சபை. |
| சட்ட அந்தஸ்து | : | 1971ம் ஆண்டின் 46ம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட 1975ம ஆண்டின் 24ம் இலக்க சட்டத்தின் பிரகாரம். |
| ஆரம்பம் | : | 1978 |

| **பதிவு செய்யப்பட்ட அலுவலகம்** | **விலாசம்** | **தொ.பேசி/ நகல்** |
|---|---|---|
| தலைமை அலுவலகம் | தேசிய வீடமைப்புச் செயலகம்,<br>கண்டி வீதி, யாழ்ப்பாணம். | 021 2222034<br>021 2224154 |
| நகர அலுவலகம் | | |

**பிராந்திய அலுவலகங்கள்**

| | | |
|---|---|---|
| மட்டக்களப்பு | பார் வீதி, மட்டக்களப்பு. | 065 2223179 |
| திருகோணமலை | உட்துறைமுக வீதி, திருகோணமலை. | 026 2224039 |
| அம்பாறை | இல: 20, தே.வீ.செ.கட்டிடம் கல்முனை. | 067 2220405 |
| புத்தளம் | பஸ் நிலையம் அருகாமை, கல்பிட்டி. | 032 2260749 |
| மன்னார் | பன்சாலை வீதி, சாந்திபுரம், மன்னார். | 023 2222373 |
| வவுனியா | இல: 67-68, பசார் வீதி,வவுனியா. | 024 2222483 |
| முல்லைத்தீவு | A9 வீதி, மாங்குளம், முல்லைத்தீவு. | 021 2060042 |
| கிளிநொச்சி | கண்டி வீதி, கிளிநொச்சி. | 021 2285638 |
| அம்பாந்தோட்டை | வெல்லவாய வீதி, வீரவில. | 047 3221201 |
| மின்னஞ்சல் | slpalmyrah@gmail.com & slpdbho@yahoo.com | |
| இணையத்தளம் | www.pdb.gov.lk | |
| கணக்காய்வாளர் | தலைமை அதிபதி,<br>கணக்காய்வாளர் திணைக்களம். | |
| சட்ட ஆலோசகர் | சட்டமா அதிபர்,<br>சட்டத் திணைக்களம். | |
| வங்கி | இலங்கை வங்கி | |

## பனை வளம்

பனை மரமானது அரக்கேசியா (Arecaceae) எனும் தாவரக்குடும்பத்திலுள்ள பொராசஸ் (Borassus) என்னும் தாவர இனத்தை சார்ந்ததாகும். பனை மரமானது தெற்கு ஆபிரிக்கா, தென்கிழக்கு ஆசியா, இந்தோனேசியாவின் வடக்குப் பகுதி போன்ற இடங்களிலும் பரவிக் காணப்படுகின்றது.

இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து நாடுகளில் காணப்படுகின்ற பனை மரங்களின் எண்ணிக்கைகள் முறையே மில்லியனில் 80, 11, 10 மற்றும் 02 மில்லியன் என 1990 களின் கணக்கெடுப்பின் படி காணப்படுகின்றது.

**இலங்கையில் பனை மரத்தின் பரம்பல் விபரம்**

| இல | மாவட்டம் | பனை மரங்கள் | இல | மாவட்டம் | பனை மரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 3,500.000 | 07 | புத்தளம் | 120,000 |
| 02 | கிளிநொச்சி | 3,500,000 | 08 | அம்பாறை | 40,000 |
| 03 | மன்னார் | 3,000,000 | 09 | அனுராதபுரம் | 40,000 |
| 04 | முல்லைத்தீவு | 500,000 | 10 | வவுனியா | 8,000 |
| 05 | திருகோணமலை | 210,000 | 11 | அம்பாந்தோட்டை | 2,000 |
| 06 | மட்டக்களப்பு | 200,000 | | — | — |
| **மொத்தம்** | | | | | **11,120,000** |

## பனைவள உற்பத்திகளின் விபரம்

| |
|---|
| **பனஞ்சாற்று அடிப்படையிலான உற்பத்தி** |
| i)நொதிப்படையாதவை: பனைவெல்லம்,பனம்பாணி,பதனீர்,கல்லாக்காரம் |
| ii)அற்ககோல் உற்பத்திகள் : சாராயம், போத்தலில் அடைக்கப்பட்ட கள், |
| iii)நொதிப்படைந்த உற்பத்திகள்: வினாகிரி |
| **பனங்களி அடிப்படையிலான உற்பத்திகள்:** |
| போத்தலில் அடைக்கப்பட்ட பனங்களகளி, பனாட்டு, பாணிப்பனாட்டு, ஜாம், கோடியல், உடனடிப்பானம், மருத்துவ அடிப்படையிலான உற்பத்திகள். |
| **கிழங்கு அடிப்படையிலான உற்பத்திகள்:** |
| கிழங்கு, பச்சை ஒடியல், ஒடியல்மா, புளுக்கொடியல்மா, பாம்போசா, பிஸ்க்கட், கேக் |
| **பனை ஓலையினாலான உற்பத்திகள்:** |
| பாரம்பரிய கைப்பணிகள்:- நாரினால் பின்னப்பட்ட கூடை, பின்னல் கதிரை, கயு பொதிசெய்யும் பெட்டி, தேயிலைப் பெட்டி, தொப்பிகள், பாய்கள், ஈர்க்கில் உற்ப்பத்திகள், தும்பு உற்பத்தி, பல் துப்பரவு செய்யும் குச்சி, பூப்பானைகள், சுவர்மாட்டிகள், தும்பு கழிவுகள் மூலம் பூங்கன்றுகள் வளர்க்கும் பொருள், மண்சாடிகள் |
| **தும்பு அடிப்படையிலான பொருட்கள்:** |
| வைரத்தும்பு- தும்பு பிறஸ், நடுத்தர தும்பு- வீட்டுப்பொருட்கள் துப்பரவு செய்யும் பிறஸ், |
| **மரத்தாலான உற்பத்திகள்:** |
| கட்டடக்கூரைகள் உருவாக்கல், வீட்டுத்தளபாடங்கள் உருவாக்கல், சிப்போட், விறகுப்பயன்பாடு |

பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டு நாட்டின் ஏனைய பகுதிகளில் ஒன்பது பிராந்திய நிலையங்களையும், பதினைந்து கற்பக விற்பனை நிலையங்களையும் 11 உற்பத்தி நிலையங்களையும், ஒரு ஆராய்ச்சி நிலையம், ஒரு பனை வடிசாலை அத்துடன் 11 மாதிரிப் பண்ணைகளும் நிர்வகிக்கப்படுகின்றன. அவற்றின் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(ஆ) செயல்திறன் தந்திரோபாயம் மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான பார்வை

- **வியாபார நடைமுறைகளை அறிக்கையிடல்**

## அபிவிருத்திப் பிரிவு

**1. பனை விதை நடுகை செயற்பாடுகள்.**

விவசாயம் சார்ந்த உணவு பொருள் மற்றும் பிறநுகர்வு பொருட்களுக்கான மூலப்பொருட்கள் கிடைப்பது காரணமாகவும் சுற்று சூழல் பாதுகாப்பில் முக்கிய அங்கமாகவும் இவ் பனை வளம் காணப்படுன்றமை குறிப்பிடத்தக்கது அந்த வகையில் பனை சார்பான அபிவிருத்தி மற்றும் அதனை நம்பிவாழும் மக்களின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தும் ஒரு அரச நிறுவனமாக காணப்படும் பனை அபிவிருத்திச் சபையானது பனை வளத்தை மேலும் அதிகரிக்கும் முகமாக புதிய பனம் விதைகளை வருடாந்தம் ஐப்பசி தொடக்கம் மார்கழி வரையான காலப்பகுதிகளில் நடுகை செய்ய பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து செயற்படுத்துவதுடன் மேதிகமாக தற்போது காணப்படும் பனை வளம் அழிவடையாது பாதுகாப்பதிலும் முக்கிய கவனம் செலுத்திவருகின்றது.

பனை நடுகை செயதிட்டங்கள் இலங்கையில் பிரதேச செலகங்களின் ஊடாக குறிப்பிட்ட பத்து மாவட்டங்களில் வருடாந்தம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தரமான பனம் விதைகள் குறித்த மாவட்டங்களில் உள்ள விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு நடுகை மூலப்பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றது.

குறிப்பாக இவ்நடுகைச் செயற்பாடானது சதுப்பு நிலங்கள், கரையோரப்பகுதிகள், தனியார் காணிகள் மற்றும் அரச திணைக்கள வளாகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**கடந்த மூன்று ஆண்டுகளில் நடுகை செய்யப்பட்ட பனை விதைகள்.**






| மாவட்டங்கள் | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 166,000 | 101,450 | 109,000 |
| கிளிநொச்சி | 5,000 | ----- | 12,500 |
| முல்லைத்தீவு | 40,000 | ----- | 27,750 |
| மன்னார் | ----- | ----- | 89,221 |
| வவுனியா | ----- | ----- | 91,000 |
| மட்டக்களப்பு | 20,000 | 40,000 | 39,000 |
| திருகோணமலை | ----- | ----- | 2,500 |
| அம்பாறை | 10,000 | ----- | 10,000 |
| புத்தளம் | 30,000 | ----- | ----- |
| **மொத்தம்** | **271,000** | **141,450** | **380,971** |

### 2. சட்ட விரோத பனை தறித்தலை கட்டுப்படுத்தல்

சட்டவிரோத அல்லது தான்தோன்றித்தனமான பனை தறித்தல் செயற்பாடுகள் காரணமாக பனை கைத்தொழில் துறை பல்வேறு சவால்களிற்கு முகம் கொடுத்து வருன்றது. பனை மரமானது குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் காலம் காலமாக வீடுகளின் கூரை வேலைகளிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றமையால், ஏனைய தேவைகளிற்கு பயனற்ற அல்லது உற்பத்தி திறன் குறைந்த வலிமையான மரங்கள் மேற்படி தேவைக்காக சரியான ஆய்வின் பின்னர் அனுமதி வழங்கப்பட்டு வருன்றது.

அத்தோடு எமது நாட்டில் தற்போது மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளான வீதி அபிவிருத்தி, மின்சார விநியோகம், வீட்டுத்திட்டங்களிற்கான காணி துப்பரவாக்கல் காரணமாக பனை மரம் வெட்டப்படுவது தவிர்க்கமுடியாதாக உள்ளது.

பனை தறித்தல் செயற்பாடானது சூழலில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதனை கவனத்தில் கொண்டு பிரதேச செயலக மட்டத்தில் அவர்களுடன் இணைந்து பனை தறித்தலின் தேவைப்பாடுகளை சரியாக இனங்கண்டு, எமது உத்தியோகத்தர்களால் அனுமதி வழங்கப்பட்டுவருகின்றது. இதற்கு மேலதிகமாக சட்டவிரோதமாக தறிக்கப்படும் பனை மரங்களிற்காக, அதனோடு தொடர்புடையவர்களிற்கு எதிராக கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக பனை தறித்தலை ஓரளவிற்கு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடிகின்றது.

**கடந்த மூன்று வருடகால பனை தறித்தல் விபரம்.**

| மாவட்டங்கள் | 2017 | 2018 | 2019 |
|---|---:|---:|---:|
| யாழ்ப்பாணம் | 12,619 | 9,240 | 15,099 |
| மன்னார் | 2,843 | 2,611 | 4,729 |
| வவுனியா | 21 | 32 | 238 |
| கிளிநொச்சி | 1,440 | 644 | 2,490 |
| முல்லைதீவு | 081 | 82 | 1,003 |
| திருகோணமலை | 442 | 478 | 613 |
| மட்டக்களப்பு | 689 | 593 | 496 |
| அம்பாறை | 68 | 119 | 111 |
| புத்தளம் | 00 | 111 | 258 |
| **மொத்தம்** | **18,203** | **13,910** | **25,037** |

### 3. மாதிரிப் பனம் பண்ணைகள்.

அதிக எண்ணிக்கையிலான பனைவிதைகள் மற்றும் நாற்றுகளானது எமது மாதிரி பண்ணைகளில் நடுகை செய்யப்படும் அதே வேளை குறித்த காலப்பகுதிக்கு பொருத்தமான இடையீட்டு பயிர்கள் பயிரிடப்பட்டு உச்ச பயனை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பதனை பொதுமக்களிற்கு தெளிவுபடுத்தும் முகமாக இவ் மாதிரி செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக பொதுமக்கள் தமது சொந்த நிலத்தில் எவ்வாறு வினைத்திறனான பனை நடுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. மாதிரி பனம் பண்ணைகளானது நீண்டகால முதலீட்டு திட்டங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. இதன் காரணமாக உடனடி வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதுடன், இதற்காக பத்து தொடக்கம் பதினைந்து வருடங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

மேலும் எமது மாதிரி பனந்தோட்டங்களானது அதிகளவான இளம் பனை மரங்களுடன் காணப்படுவதன் காரணமாக அவற்றை சிறந்த முறையில் நிர்வகித்து பாதுகாக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இவ்வாறு செயற்படும் போது மட்டுமே அதி உச்ச பலன்களை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**மாதிரிப் பண்ணைகளின் விபரம்**

| இலக்கம் | மாவட்டம் | இடமும் பரப்பளவும் | பிரதான பயிர்கள் |
|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | மாமுனை – 200 ஏக்கர்<br>நெடுந்தீவு – 5 ஏக்கர்<br>குடத்தனை 10 ஏக்கர் | வடலிகள், அன்னாசி<br>வடலிகள்<br>வடலிகள் |
| 02 | வவுனியா | புளியன்குளம் – 50 ஏக்கர் | வடலிகள், எலுமிச்சை |
| 03 | கிளிநொச்சி | ஊற்றுப்புலம் –50 ஏக்கர்<br>கவுதாரிமுனை –10 ஏக்கர்<br>முழங்காவில் – 2 ஏக்கர் | வடலிகள்<br>வடலிகள்<br>வடலிகள் |
| 04 | அம்பாந்தோட்டை | வீரவில 22 ஏக்கர் | வடலிகள், வாழை, எள்ளு |

**துறை அபிவிருத்தி**

- பனை வளம் ஒரு நீண்டகால முதலீட்டுக்குரியதுடன் அதில் நேரடியாக தங்கியிருக்கின்ற குடும்பங்களுக்கு சிறந்த வாழ்வாதாரமாக உள்ளது.
- மேலதிகமாக நடுகை செய்யப்படுகின்ற பனை முழுச் சமுகத்திற்கும் இயற்கைச் சமநிலை மற்றும் சூழல் பாதுகாப்பை தருகின்றது.
- பனை உயிரியல் வேலைத்திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது எல்லைப்புற கிராமங்களில் யானையினால் ஏற்படுகின்ற பாதிப்புகளைத் தடுக்கன்றது.
- எல்லைப்புற காணிகளில் பனம் விதை நடுகை ஊக்குவிக்கப்படுகின்றது.
- களவாக பனை தறிப்பதை தடுக்க பிரதேச செயலகங்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
- முதிர்ச்சியடைந்த பனை மரம் வீட்டுக்கூரைக்கு மிகவும் பயனுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணத்தின் தேவையைப்பூர்த்தி செய்ய 80வீதத்திற்கு மேலான மரம் தேவையாகும். பிரதேச செயலகங்களின் கணக்கீட்டின்படி வருடாந்தம் 20,000 முதிர்ச்சியடைந்த பனை மரங்கள் வெட்டப்படுகின்றன. இத்தரவின்படி வருடாந்தம் கிட்டத்தட்ட 140 மில்லியன் ரூபா ஜிடிபி க்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

## விரிவாக்கல் பிரிவு

பனை அபிவிருத்தி சபையானது தொழிநுட்ப பரிமாற்ற நிகழ்வுகளிலும் உள்வாங்கியுள்ளது. இச்செயற்பாடு வறிய கிராம மக்கள் மற்றும் மகளிர் குழுக்களுக்கான திறன் விருத்தி, தொழிற் கல்வி பயிற்சி ஊடாக வழங்கப்பட்டுள்ளது. பனை ஓலை பயிற்சியே விரிவாக்கல் பகுதி மூலம் பிரதானமாக வழங்கப்படுகின்றது. எனினும் உற்பத்திப் பகுதி மற்றும் ஆராய்ச்சி பகுதியின் அனுசரனையோடு பனம்களி, பனம்சாறு மற்றும் தும்பு சார் பயிற்சிகளும் எம்மால் வழங்கப்படுகின்றது.

1. **பனை ஓலை கைவேலை பயிற்சி**

சபையினுடைய நன்கு பயிற்றப்பட்ட கிட்டத்தட்ட 50 கைவேலை ஆசிரியர்களினால் கைவேலை பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன. வேலையற்ற வறிய கிராம மக்கள், பாடசாலையில் இருந்து இடைவிலகியவர்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு சுயதொழிலில் ஈடுபட பயிற்சிகளை வழங்குவதற்கு வெவ்வேறு கிராமங்களிற்கு தலைமை அலுவலகம் ஊடாக அனுப்பப்பட்டார்கள். இந்த பயிற்சிகள் சபையினுடைய மாவட்ட முகாமையாளர்களால் ஒழுங்கமைத்து மேற்பார்வை செய்யப்பட்டது. இதில் ஆறு மாத பயிற்சிகள் புதிய பயிலுனர்களிற்காகவும் மூன்று மாத பயிற்சிகள் புதிய தொழில் நுட்பங்களை உட்புகுத்துவதற்காக ஏற்கனவே தொழிலில் ஈடுபடுபவர்களிற்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம் வருடாந்தம் நூற்றுக்கு மேற்பட்ட சுயதொழில் முனைவோர்கள் உருவாக்கப்படுகின்றார்கள்.

பனை அபவிருத்திச் சபையின் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் உற்பத்தி பகுதியில் பணியாற்றும் துறை சார் உத்தியோகத்தர்களின் வழிகாட்டல்களின் கீழ் பனை சார் உணவு உற்பத்தி, பனங்களி பதப்படுத்தல், பனை மரம் சார் கைப்பணிபொருட்கள் உற்பத்தி போன்றவற்றின் தேவை மற்றும் வேண்டுகோளிற்கிணங்க பயிற்சிகள் வருடாந்தம் இடம்பெறுகின்றது.

இப்பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்த பின், அவர்கள் பனை அபிவிருத்தி சபையின் உற்பத்தி குழுவுடன் அல்லது பனை சார் சங்கங்களுடன் இணைந்து சிறிது காலத்தின் பின் சந்தையின் தேவைக்கமைய பனை சார்ந்த உற்பத்தி துறையில் ஈடுபடுத்துவதற்கு அவர்களுக்கு உதவியும் ஒத்துழைப்பும் வழங்கி, அவர்களது தரமான உற்பத்திகளை கற்பகம் விற்பனை நிலையம் ஊடாக சந்தைப்படுத்தப்படுகின்றன. மேலும் இவ்உற்பத்திகளிற்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதிப்படுத்துவதோடு, தர பரிசீலனை மற்றும் ஆய்விற்கு தேவையான ஒத்துழைப்புகள் காலத்திற்கு காலம் வழங்கப்பட்டு வருகின்றது.

**செயற்பாடு** : பனை அடிப்படையிலான கைவேலை பயிற்சி வழங்குவதன் மூலம் விரிவாக்கம்.

**குறிக்கோள்** : பனை அடிப்படையிலான சுயவேலை வாய்ப்பு.

**கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட கைப்பணி பயிற்சி விபரம்.**

| மாவட்டம் | பயிலுனர்கள் - 2017 | பயிலுனர்கள் - 2018 | பயிலுனர்கள் - 2019 |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 87 | 51 | 132 |
| கிளிநொச்சி | 51 | 20 | 21 |
| முல்லைத்தீவு | 63 | 35 | 25 |
| வவுனியா | 50 | 46 | 42 |
| மன்னார் | 39 | 20 | 20 |
| புத்தளம் | 35 | 23 | 28 |
| திருகோணமலை | 117 | 20 | 25 |
| மட்டக்களப்பு | 221 | 234 | 340 |
| அம்பாறை | 107 | 70 | 110 |
| அம்பாந்தோட்டை | 38 | - | - |

| | | | |
|---|---|---|---|
| குருநாகல் | 24 | 20 | 10 |
| அனுராதபுரம் | 40 | 20 | 10 |
| **மொத்தம்** | **872** | **559** | **763** |

**கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தியாளர்களால் வழங்கப்பட்ட கைப்பணி பெறுமதி**

| ஆண்டு | உற்பத்தி செயற்பாட்டில் ஈடுபட்ட உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை | உற்பத்தி பெறுமதி ரூபா மில்லியன் |
|---|---|---|
| 2017 | 1327 | 13.26 |
| 2018 | 2112 | 20.74 |
| 2019 | 2364 | 61.30 |

**2019ம் ஆண்டில் இடம்பெற்ற ஏனைய பனை சார் பயிற்சிகள்**

| பயிற்சியின் வகை | பயிற்சி நிலையங்களின் எண். | பயிற்சிகளின் எண். |
|---|---|---|
| பனங்களி உற்பத்திப் பயிற்சி. | 01 | 25 |
| பனம் சாற்று உற்பத்திப் பயிற்சி. | 01 | 39 |
| பனம் கைப்பணி பயிற்சியாளர் பயிற்சி. | 01 | 25 |

**பயிற்சியாளர் பயிற்சி :**

விசேட பயிற்சி செயற்திட்டமானது பனங்கைப்பணி பயிற்சியாளர்களின் திறன் விருத்திக்காக மூன்று (3) நாட்களை உள்ளடக்கிய வதிவிட பயிற்சி நெறியாக ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பயிற்சி நெறியானது பதினொரு (11) வளவாளர்களை கொண்டு நாற்பத்தியாறு (46) கைப்பணி போதனாசிரியர்களிற்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. மேற்படி பயிற்சி நெறியானது பல்வேறு வகையான பனங்கைப்பணி அபிவிருத்தி தொடர்பாக கிராம மட்டத்தில் சிறப்பாக முன்னெடுப்பதுடன், அவற்றை அபிவிருத்தி செய்வதன் அவசியம் தொடர்பாகவும் விரிவான விளக்கம் வழங்கப்பட்டது.






2. **பனை சார் உற்பத்தியாளர் சங்கம் உருவாக்கம்.**

பனைசார் உற்பத்தி செயற்பாட்டினை அபிவிருத்தி செய்து வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பனை சார் உற்பத்தியாளர் சங்கங்களை பனை அபிவிருத்தி சபையின் கீழ் அதன் நியமங்களிற்கமைய பதிவு செய்துவருகின்றது.

**2019ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட உற்பத்தி குழுக்கள் விபரம்.**

| மாவட்டம் | சங்கங்களின் எண்ணிக்கை | மொத்த அங்கத்தவர்கள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 25 | 794 |
| கிளிநொச்சி | 9 | 225 |
| வவுனியா | 3 | 78 |
| முல்லைத்தீவு | 3 | 50 |
| மன்னார் | 8 | 330 |
| மட்டக்களப்பு | 17 | 484 |
| புத்தளம் | 5 | 70 |
| திருகோணமலை | 5 | 135 |
| அம்பாறை | 6 | 149 |
| **மொத்தம்** | **81** | **2,315** |

## நிர்வாகப் பிரிவு.

**மனிதவள, ஆளணி முகாமைத்துவம்**

**i) உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்**

1) திரு. வி.சாம்சன் கபில் - ஆய்வுகூட உதவியாளர்
2) செல்வி. ஸ்ரீ.சங்கீதா - ஆய்வுகூட உதவியாளர்
3) திருமதி. ரி.கிருசாந்தி - ஆராய்ச்சி உதவியாளர்
4) செல்வி. என்.சேபினி - ஆராய்ச்சி உதவியாளர்
5) செல்வி. ரி.சுகன்யா - ஆராய்ச்சி உதவியாளர்

**ii) பதவி உயர்வு வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள்.**

**தொழிலாளர் பதவியிலிருந்து முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு**

1. திருமதி அ.சுகுனா - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது)

**முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது - தொழில்நுட்பம்)**

1. திருமதி ஏ.அமிர்தலிங்கம் - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)
2. திருமதி. ரி.பவானி - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)
3. திரு. எஸ்.ஜே.சத்தியராஜன் - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)
4. திருமதி. எஸ்.வசந்தசுலொஜினி - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)
5. திருமதி. ஆர்.பிறின்சி - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)
6. திரு. கே.நாகேஸ்வரன் - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)

**விற்பனை உதவியாளர் - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது)**

1. திருமதி. ரி.ஜெயராணி - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது)
2. திரு. ஜே.மார்க் எடிசன் - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது)
3. திரு. பி.அம்பிகாபதி - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது)

**iii) ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்.**

சபையின் எட்டு உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்று சென்றுள்ளதுடன் ஒரு உத்தியோகத்தர் நோய்நிலை காரணமாக சேவைக்காலத்திற்குள் மரணமடைந்தும் உள்ளார்.

**ஓய்வு பெற்றுச்சென்ற பணியாளர்கள்**

1. திருமதி. ஜே.ஜி.எச்.நந்த றஞ்சினி - முகாமைத்துவ உதவியாளர்
2. திருமதி. பி.கிறிஸ்ரீனா - முகாமைத்துவ உதவியாளர்
3. திருமதி. பி.யமுனா - மாவட்ட முகாமையாளர்
4. திரு. எம்.சிறீதரன் - மாவட்ட முகாமையாளர்
5. திரு. ஏ.கந்தசாமி - தொழிலாளி
6. திரு. வி.பி.தேவராஜா - முகாமையாளர் (நிதி)
7. திருமதி. வை.சௌந்தரநாதன் - முகாமைத்துவ உதவியாளர்
8. திரு. எஸ்.தேவதாஸ் - அலுவலக உதவியாளர்

**மரணமடைந்த பணியாளர்**

1. திருமதி. சி.யோகராணி - விற்பனை உதவியாளர்

**iv) சபையின் ஆளணி நிலை 31-12-2019.**

| இல | 31/12/2019 திகதி வரையான பதவி நிலைப் பெயர் | அனுமதிக்கப்பட்ட ஆளணி எண். | தற்போதய ஆளணி எண். |
|---|---|---|---|
| 1 | நிறைவேற்றுத் தரம் | 28 | 23 |
| 2 | மேற்பார்வையாளர்/ தொழில்நுட்ப உத்தியோகத்தர்/ விற்பனையாளர் | 19 | 14 |
| 3 | முகாமைத்துவ உதவியாளர்கள்/ அது தொடர்பானது | 69 | 58 |
| 4 | திறன் மற்றும் திறனற்ற தொழிலாளர்கள் | 62 | 64 |

| | | | |
|---|---|---|---|
| 5 | சிற்றூளியர்கள் மற்றும் முழுமையான திறனற்ற தொழிலாளர்கள் | 49 | 47 |
| 6 | அமைய மற்றும் பயிற்சி | - | 01 |
| **மொத்த ஊழியர் எண்ணிக்கை** | | **227** | **208** |

v) **நிறுவன அமைப்பு விளக்கப்படம்**




vi) **பயிற்சி செயற்திட்டங்கள்/ திறன்வருத்தி**

PL1, PL2 & PL3 பதவிநிலை உத்தியோகத்தர்களிற்கான தடைதாண்டல் பரீட்சை 4ம் திகதி சித்திரை மாதம் 2019 நடைபெற்றது.





**பயிற்சி 2: வினைத்திறன் பயிற்சிகள்**

முகாமைத்துவ உதவியாளர்களிற்கான திறன்விருத்தி பயிற்சிகளானது (தொழில்நுட்பம் & தொழில்நுட்பமல்லாத ) 05.06.2019 தொடக்கம் 07.06.2019 வரை நடைபெற்றது.





**பயிற்சி 3: வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் சமாந்தர உத்தியோகத்தர்களிற்கானது – 06/07/2019**




பனை அபிவிருத்திச் சபையில் பணியாற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அவர்களிற்கு சமாந்தரமான பணியாளர்களிற்காக தடைதாண்டல் பரீட்சையானது 2019ம் ஆண்டு ஆடி மாதம் 06ம் திகதி யாழ்ப்பானம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றதுடன், அதில் சபையின் 66 பணியாளர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

**அலுவலக கட்டிடங்களின் உட்கட்டமைப்புகள்.**

1. கைதடியில் சபையின் பனை ஆராய்ச்சி நிலைய வளாகத்தின் PTI கட்டிட முதலாம் தள கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றது.




2. திக்கம் வடிசாலையில் காவலாளி கட்டிடம், தண்ணீர் தாங்கி, வாயில் கதவு இணைப்பு ஆகிய கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றது.




3. முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் 01.10.2019 அன்று மாங்குளத்தில் திறந்து வைக்கப்பட்டது.






## திட்டமிடல் பகுதி

திட்டமிடல் பிரிவானது பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்ளும் பொருட்டு 2017 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக சபையின் நிதி ஒதுக்கீடுகளிற்கமைய பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக திட்டமில் பிரிவானது ஒழுங்கமைக்கப்பட்டதுடன் சபையின் நடவடிக்கைகளை தங்குதடையின்றி மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதுடன் திட்டங்களின் நிலை தொடர்பாக காலத்திற்கு காலம் முகாமைக்கு அறிக்கையிடும் பணிகளும் திட்டமிடல் பகுதியின் பிரதான பணிகளில் ஒன்றாகும்.

மேற்படி நோக்கத்திற்காக திட்டமிடல் பிரிவிற்கு பின்வரும் பிரதான பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

- தரவு முகாமைத்துவம்
- திட்ட நடைமுறைப்படுத்தல்
- பெறுகை நடவடிக்கைகள்
- திட்ட கண்காணிப்பு மீளாய்வு

எப்படியாக இருந்த போதும் திட்டமிடல் பிரிவானது சிறப்பான திட்டங்களை திட்டமிட்டு மேற்கொள்வதற்கென சபையின் நோக்கிற்கமைய உருவாக்கப்பட்டிருந்த போதும், இதற்கான உரிய அனுமதிக்காக அமைச்சிற்கும் தாபன கிளைக்கும் அனுமதிக்காக தேவையான நடவடிக்ககைள் செய்யப்பட்டு வருவதுடன், இதற்கான அனுமதியானது வெகுவிரைவில் கிடைக்குமென எதிர்பார்ப்பதுடன் அதன் சீரான இயங்குநிலைக்கு தேவையான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

### திட்டமிடல் பிரிவின் செயற்பாடுகள்

- எதிர்கால திட்டங்களை சிறப்பாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு தேவையான பாதீட்டு தயாரிப்புக்கு தேவையான பல விடயங்கள் இப்பகுதியின் ஊடாக செயற்படுத்தப்படவுள்ளது.
- செயற்பாட்டுத் திட்டம்.
- பெறுகைத்திட்டம்.
- 2019ம் ஆண்டில் 143 பெறுகை செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றில் 117 மூலதன நிதிக்குரியதாவும் 26 மீண்டெழும் செலவினத்திற்குரியதாகவும் அமைந்துள்ளது.
- கண்காணிப்பு மற்றும் மீளாய்வு நடவடிக்கைகளிற்காக மாதாந்த அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றது.

## உற்பத்திப் பிரிவு.

பனை அபிவிருத்திச் சபையானது உண்ணக்கூடிய உணவுப்பொருளாகவும், உணவற்ற பொருளாகவும் பனைசார்ந்த உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. உண்ணக்கூடிய பொருட்கள் பிரதானமாக பனம் பழத்திலிருந்து பெறப்படுகின்றது. மேலும் உணவற்ற பொருட்கள் மற்றும் குடிவகைகள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றது. இவை எமது மாதிரி உற்பத்தி நிலயங்களில் உற்பத்தி செய்யப்பட்டு கற்பக விற்பனை நிலையங்களின் ஊடாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. உற்பத்தி பகுதியின் பிரதான நோக்கம் பெறுமதி சேர் உணவு பொருட்களை பனைத் தொழில் துறைக்கு அறிமுகப்படுத்துவதாகும். உற்பத்திக்காக பனை சரர் மூலப்பொருட்களான ஒடியல், புழுக்கொடியல், பதநீர், பனாட்டு என்பன உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து சிறந்த ஆலோசனை வழிகாட்டலுடன் தரமான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

பாரிய செயற்திட்டங்கள் இப்பிரிவின் ஊடாக இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

1. காரைநகர் மற்றும் கைதடி உற்பத்தி நிலையங்களின் உட்கட்டுமான பணிகள் நடைபெற்று தரமான உற்பத்தி முறைகள் பின்பற்றப்படுவதுடன் உரிய வசதிகளுடன் கூடிய களஞ்சிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
2. பனை வெல்ல உற்பத்தியில் பயன்படுத்தப்படும் சூடாக்கி இயந்திர பாவனை தொடர்பாக உற்பத்தி பகுதி உத்தியோகத்தர்களிற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
3. உற்பத்தி நடவடிக்கைகளுக்கு மிகவும் தேவையாக உள்ள உபகரணங்கள் சபையின் உற்பத்தி நிலையங்களான கொழும்பு, கற்பிட்டி, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிற்கு வழங்கப்பட்டுள்ளன.
4. புதிய பனை சார் உணவு (புழுக்கொடியல் சத்துமா உருண்டை) உற்பத்தியானது வடிவமைக்கப்பட்டு சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
5. வாடிக்கையாளரை மிகவும் கவரக்கூடிய விதத்தில் பொதியிடல் செயற்பாடுகள் புதிய வடிவத்தில் சுகாதார நடைமுறையின்படி செயற்படுத்தப்பட்டது.
6. பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் உற்பத்தி ஊழியர்கட்கு உற்பத்தி தொடர்பான பயிற்சி ஒன்று விரிவாக்கப் பிரிவின் ஊடாக வழங்கப்பட்டது.
7. புதிய பொதியிடல் தொழில் நுட்பமானது பழரச பானத்திற்கு வழங்கப்பட்டது.







**கடந்த இரண்டு வருடங்களில் உற்பத்தி அளவு:**

| உற்பத்திகள் | அளவு | 2018 | 2019 |
|---|---|---|---|
| **பதனீர் சார்ந்த உற்பத்திகள்** | | | |
| பனங்கட்டி உற்பத்தி | மொத்த உற்பத்தி கி.கிராம் | 17760.72 | 10432.00 |
| பனம்பாணி உற்பத்தி | மொத்த உற்பத்தி லீற்றரில் | 4745.44 | - |
| கல்லாக்கார உற்பத்தி | மொத்த உற்பத்தி கி. கிராம் | 133.50 | 8.00 |
| **பனம்பழம்/ பனங்களி அடிப்படையான உற்பத்திகள்** | | | |
| பனங்கழி உற்பத்தி | மொத்த உற்பத்தி லீற்றரில் | 5500.00 | 12607.00 |
| மென்பான உற்பத்தி | போத்தல் எண்ணி. (190மி.லீ) | 32113.00 | 13767.00 |
| பனங்கிறஸ் உற்பத்தி | போத்தல் எண்ணி. (750மி.லீ) | 3182.00 | 4727.00 |
| ஜாம் உற்பத்தி | போத்தல் எண்ணி. (450கி) | 833.00 | 919.00 |
| பனாட்டு உற்பத்தி | மொத்த உற்பத்தி கி.கிராம் | 650.95 | 1023.25 |
| விசேட பனாட்டு உற்பத்தி | மொத்த உற்பத்தி கி.கிராம் | 253.25 | 546.75 |
| ஒயில் கேக் உற்பத்தி | எண்ணிக்கை (கி) | 4514.00 | 4138.00 |
| பனம் பலகார உற்பத்தி | பைக்கற் எண்ணிக்கை | 12807.00 | 5752.00 |
| ஏனைய இனிப்பு வகைகள் மற்றும் பலகாரங்கள் | பைக்கற் எண்ணிக்கை | 16003.00 | 9579.00 |
| பக்கற்றில் அடைக்கப்பட்ட பனம்பழ பானம் | பைக்கற் எண்ணி. (200 மி.லீ) | 8928 | 9144 |
| **கிழங்கை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள்** | | | |
| புழுக்கொடியல் மா | மொத்த கொள்வனவு கி.கி | - | 3787.50 |
| புழுக்கொடியல் உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 9161.95 | 2787.50 |
| சீவல் ஒடியல் உற்பத்தி | மொத்த கொள்வனவு கி.கி | 3500.00 | 2687.0 |
| காய்ந்த புழுக்கொடியல் மா | மொத்த கொள்வனவு கி.கி | 2592.00 | 3661.50 |
| ஓடியல் கூழ் உற்பத்தி | பைக்கற் எண்ணி. (150ப) | 596.00 | 125.00 |
| பாம்போசா உற்பத்தி | மொத்த கொள்வனவு (150கி) | 3490.00 | 1369.00 |
| **ஏனைய உற்பத்திகள்** | | | |
| பனை சாரா உற்பத்திகள் (தயிர், மிளகாய், மாஸ்மலோ, குளுக்கோரச, தட்டுவடை) | மொத்த உற்பத்தி | - | 2238.00 |

| | | |
|---|---|---|
| **மொத்த உற்பத்தி பெறுமதி விற்பனைக்காக (மில்லியன்)** | **16.32** | **17.72** |

பனை அபிவிருத்திச் சபையானது யாழ்பாணம், கொழும்பு, மன்னார், மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை ஆகிய இடங்களில் உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ளது.

உற்பத்தி நிலையங்களின் விபரம்

| மாவட்டம் | பனை வெல்ல உற்பத்தி நிலையம் | பனங்களி உற்பத்தி நிலையம் | உணவும் மென்பான உற்பத்தி நிலையம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | சிங்கைநகர் | சிங்கைநகர் | கைதடி |
| | காரைநகர் | | |
| மன்னார் | கட்டுக்காரன் குடியிருப்பு | படப்படி | |
| | தரவன்கோட்டை | | |
| | படப்படி | படப்படி | |
| வவுனியா | | | வவுனியா |
| திருகோணமலை | வரோதயநகர் | வரோதயநகர் | |
| மட்டக்களப்பு | | முகத்துவாரம் | |
| கொழும்பு | | | தெகிவளை |
| புத்தளம் | | கற்பிட்டி | |

## சந்தைப்படுத்தல் பிரிவு

பனை அபிவிருத்தி சபையானது தனது சொந்த உற்பத்தி பொருட்களை மட்டுமல்லாது சமூக மட்டத்தலிருந்து உற்பத்தியாகும் பொருட்களையும் கொள்வனவு செய்து சபையின் பத்திற்கு மேற்பட்ட கற்பக விற்பனை நிலயங்களினூடாக விற்பனை செய்து வருகின்றது அதனடிப்படையில் பிரதானமாக யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, வவுனியா, புத்தளம், மன்னார் மற்றும் திஸ்ஸமஹராம ஆகிய மாவட்டங்களில் தனது விற்பனை நிலையங்களை அமைத்து சேவையாற்றிவருகின்றது.

**விற்பனை நிலையங்கள் (கற்பகங்கள்)**

1) **யாழ் மாவட்டம்** - பருத்தித்துறை வீதி, நல்லூர்.
2) **யாழ் மாவட்டம்** - காட்சியறை, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
3) **யாழ் மாவட்டம்** - இல. 129டி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
4) **யாழ் மாவட்டம்** - யாழ்ப்பாணம் பஸ் நிலையம்
5) **கொழும்பு மாவட்டம்** - பேரங்காடி, இல. 502 காலி வீதி, கொழும்பு - 06.
6) **மன்னார் மாவட்டம்** - மடு வீதி, மன்னார்.
7) **மன்னார் மாவட்டம்** - மன்னார் நகரம், மன்னார்.
8) **மட்டக்களப்பு மாவட்டம்**- 5, யுடிஎ கட்டிடம், மட்டக்களப்பு.
9) **மட்டக்களப்பு மாவட்டம்**- காட்சியறை, வெளிச்சவீடு, மட்டக்களப்பு.
10) **திருகோணமலை** - மின்சார நிலைய வீதி, திருகோணமலை.
11) **வவுனியா** - 67/68 கடைவீதி, வவுனியா.
12) **அம்பாறை** - 107 டீ, மட்டக்களப்பு வீதி, கல்முனை.
13) **புத்தளம்** - புதிய பஸ் நிலையம். கல்பிட்டி.
14) **ஹம்பாந்தோட்டை** - புத்த விகாரைக்கு முன்னால் திஸ்ஸமஹராம.
15) **மொனறாகலை** - செல்லகதிர்காமம் வீதி, கதிர்காமம்.

**கற்பகம் விற்பனை நிலையங்களின் மொத்த விற்பனை (2018 - 2019)**

| கற்பகம் | 2018 | 2019 |
|---|---|---|
| நல்லூர் | 8,249,989.10 | 7,469,845.45 |
| யாழ் - காட்சியறை | 2,219,271.50 | 2,560,935.70 |
| யாழ் - கே.கே.எஸ் வீதி | 4,445,108.50 | 3,110,738.50 |
| யாழ் - பஸ் நிலையம் | 1,729,811.53 | 1,269,975.81 |
| யாழ் - கற்பகச்சோலை | 954,118.40 | — |
| யாழ் - மந்திகை | | 227,631.50 |
| யாழ்ப்பாணம் களஞ்சியம் | 122,150.00 | 1,031,991.45 |
| யாழ்ப்பாணம் உற்பத்தி நிலயம் | 1,223,871.75 | — |
| தலைமை அலுவலகம் | — | 111,930.79 |
| கற்பகம் பேரங்காடி | 3,649,478.06 | 10,507,353.81 |
| கொழும்பு - கற்பகம் | 7,025,238.15 | 611,398.25 |
| பொருட்காட்சி விற்பனை | 1,783,510.59 | 3,298,820.55 |
| நடமாடும் விற்பனை சேவை | 360,640.50 | — |
| வவுனியா | 7,704,947.00 | 4,418,816.99 |
| மட்டக்களப்பு - கற்பகம் | 2,294,006.10 | 1,555,464.10 |
| மட்டக்களப்பு - காட்சியறை | 1,268,282.25 | 1,312,338.25 |
| மட்டக்களப்பு - பிராந்திய அலுவலகம் | — | 8,878.00 |
| கல்முனை | 135,815.00 | 2,140.00 |
| மன்னார் மடு | 645,932.35 | 682,504.95 |
| மன்னார் நகரம் | 2,698,113.00 | 1,958,964.10 |
| திருகோணமலை | 1,381,482.95 | 861,350.50 |
| கற்பிட்டி | 313,915.00 | 95,000.00 |
| கதிர்காமம் | 1,091,965.15 | 368,316.95 |
| திஸ்ஸமஹராம | 888,745.00 | 967,395.15 |
| வீரவில | 193,820.00 | — |
| **மொத்தம்** | **50,258,061.88** | **42,431,790.80** |

## ஆராய்ச்சிப் பிரிவு.

### பனை ஆராய்ச்சி நிறுவனம்

பனை ஆராய்ச்சி நிறுவனமானது தொடர்ச்சியான விஞ்ஞரன ரீதியான உயர்நிலை தன்மையை பனை ஆராய்ச்சி நிறுவனத்திற்குள்ளும் பனை சார் தொழிற்துறையின் விருத்தி செய்து பனை சார் துறையை ஆராய்ச்சி செயற்பாட்டின் ஊடாக விரிவாக்கம் செய்வதுடன் சக்திப்படுத்தி இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு வலுச்சேர்க்கும் துறையாக விருத்தி செய்வதாகும். மேலும் பனை சார் உணவு உற்பத்தியிலீடுபடும் நிறுவனங்களை ஒழுங்கமைத்து கட்டுப்பாடுகளுடன் கூடிய மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதன் ஊடாக தரமான பனை சார் உற்பத்திகளை உருவாக்குவதற்கும் துணைசெய்கின்றது.

1. **பகுப்பாய்வு ஆய்வுகூடம்**

**ஆராய்ச்சி சிறப்பம்சங்கள் :**

பனை வெல்லம் சார்ந்த உற்பத்திகள் நமது நாட்டின் தேசிய பொருளாதார வளர்ச்சியை மேமடபடுத்தும் திறனைக் கொண்டுள்ளன. ஆனாலும் சர்வதேச சந்தையுடன் போட்டியீடுவதற்கு தயாரிப்புக்களின் தரத்தை மேம்படுத்த வேண்டும் பனம்கைத்தொழிலினை உற்பத்தி திறன் மற்றும் இலாபத்தை அதிகரிப்பதற்கு இந்த ஆய்வுகூடம் பின்வரும் ஆய்வுகளை மேற்கொண்டது.

a. இரசாயன பகுப்பாய்வைப் பயன்படுத்தி பனங்கள்ளின் நம்பகத்தன்மையை தீர்மானித்தல்-இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து முடிக்கப்பட்டது.
b. புதிய பதனீர் சாறு மற்றும் பாதுகாக்கப்பட்ட பாணி ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட பனை வெல்லத்தின் தரம் மற்றும் ஊட்டச்சத்து அளவுருக்கள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வு, இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துடன் இணைந்து முடிக்கப்பட்டது.

**ஆராய்ச்சி வெளியீடுகள்:**

மேலே கூறப்பட்ட ஆராய்ச்சிகள் தேசிய மற்றும் சர்வதேச இதழ்களிலும் மாநாட்டு நடவடிக்கைகளிலும் வெளியிடப்பட்டன அல்லது சமர்ப்பிக்கப்பட்டன.

**சேவை மற்றும் மக்கள் தொடர்பு:**

பகுப்பாய்வு ஆய்வகம் தேசிய மற்றும் சர்வதேச தரங்களுடன் தொடர்புடைய உணவு சார்ந்த தயாரிப்புகளில் இரசாயன மற்றும் ஊட்டச்சத்து சோதனைகளை செய்கிறது. மேலும், பகுப்பாய்வு ஆய்வகம் 18 க்கும் மேற்பட்ட இரசாயன அளவுருக்களுக்கு அங்கீகாரம் (ISO 17025) பெற்றது. இப்போது அது பிஸ்கட், மாவுகள், உறைந்த தின்பண்டங்கள் மற்றும்/ ப்ரீஸ் பானங்கள், பன்கள், கேக்குகள், ரொட்டி, தயிர், ஐஸ்கிரீம், அரக்கு மற்றும் எண்ணெய்களை நோக்கி விரிவாக்கப் போகிறது.

பகுப்பாய்வு ஆய்வகத்தின் தர நோக்கங்கள்:

- அங்கீகாரத்தின் நோக்கத்திற்கான இரசாயன அளவுருக்களின் எண்ணிக்கையை ஆண்டுக்கு 25 ஆக அதிகரித்தல்
- வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை ஆண்டுதோறும் 25% அதிகரித்தல்.
- சோதனையின் நோக்கத்தில் மெட்ரிக்குகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

**தொழில்துறை/ ஆராய்ச்சி ஒத்துழைப்பு:**

a. இந்திய இலங்கை ஆராய்ச்சி திட்டத்தின் ஒரு பகுதியாக ஒரு கூட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது
b. ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் ஆராய்ச்சி ஒத்துழைப்புகளை மேற்கொண்டமை.
c. PTB ஜெர்மனி ஊழியர்களுடன் ISO தொடர்பான முன்னேற்றக் கூட்டங்களில் பங்கேற்றமை.

**மேற்கொள்ளப்பட்ட பயிற்சி மற்றும் கல்வி வருகைகள்:**

a. அனுராதபுரத்தில் உள்ள அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மைக்கான தேசிய நிறுவனத்தில் (NIPHM) ISO 17025:2017 குறித்த பயிற்சி (பயிற்சியாளர்: PTB, ஜெர்மனி)
b. பனை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், யாழ்ப்பாணம் (அமைப்பாளர்: PTB, ஜெர்மனி) மூலம் ஐஸ்கிரீம் சோதனை குறித்த பட்டறை
c. மெண்டலி மென்பொருள் மற்றும் SPSS மென்பொருள் பயன்பாடு பற்றிய பயிற்சி
d. பனை ஆராய்ச்சி நிறுவனத்தை வலுப்படுத்தவும், CRI உடனான ஒத்துழைப்பை உருவாக்கவும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்திற்கான (CRI) வருகை.
e. இலங்கை பரிசோதனை ஆய்வகங்களின் சங்கத்தின் அளவீட்டு கருவிகளின் அளவீடு குறித்த பயிற்சி
f. இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான இலங்கை கவுன்சிலின் ஆராய்ச்சி முறை எழுதும் பட்டறை.

## 2. உணவு மற்றும் தொழில்நுட்ப ஆய்வகம்

**ஆராய்ச்சி சிறப்பம்சங்கள்:**

ஆரோக்கியமான உணவுப் பொருட்கள் மற்றும் இயற்கையான பாதுகாப்பான தோல் பராமரிப்புப் பொருட்களுக்கான நுகர்வோர் தேவை சமீபத்திய ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. எனவே, பனை சார்ந்த உணவுப் பொருட்கள் மற்றும் தோல் பராமரிப்புப் பொருட்கள் முற்றிலும் கரிம மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் உள்ளிட்ட ஊட்டச்சத்துக்களால் நிரம்பியிருப்பதால், பெரிய சந்தை தேவையைப் பெறலாம். எனவே தற்போதுள்ள பனை உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தவும், நாவல் பனை தயாரிப்புகளை உற்பத்தி செய்யவும், நுகர்வோர் தேவையை ஈர்ப்பதற்காக சந்தையில் உள்ள பல்வேறு வகையான உணவு மற்றும் தோல் பராமரிப்பு பொருட்களுடன் போட்டியிடக்கூடிய தயாரிப்புகளை பல்வகைப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இது சம்பந்தமாக, ஆய்வகம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுகளை தனித்தனியாகவும், ஆய்வக ஊழியர்களால் மேற்பார்வையிடப்பட்ட இளங்கலை பட்டதாரிகளாகவும் நடத்தியது:

a. பனைமரக் கூழ் மற்றும் கற்றாழை ஜெல் ஆகியவற்றைப் பயன்படுத்தி முகக் கழுவலை உருவாக்குதல் மற்றும் தரப்படுத்துதல் - (இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துடன் இணைந்து நிறைவு செய்யப்பட்டது)
b. பனை கிழங்கு மாவைப் பயன்படுத்தி நூடுல்ஸை உருவாக்குதல் மற்றும் தரப்படுத்துதல் – இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் (இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துடன் இணைந்து) நடைபெற்ற சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கில் நிறைவு செய்யப்பட்ட சிறந்த விளக்கக்காட்சி விருது பெறப்பட்டுள்ளது.
c. பானை ஸ்டில் மற்றும் பனை ஸ்டில் பாமாயில் அரக்கின் இரசாயன பண்புகள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வு – (இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துடன் இணைந்து)
d. பனை பழம் (போராசஸ்/ பிளாபெல்லிஃபர்) கூழ் மற்றும் கற்றாழை ஜெல் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஆக்ஸிஜனேற்ற செறிவூட்டப்பட்ட சோப்பை முறைப்படுத்துதல் மற்றும் தரப்படுத்துதல் – நடந்து வருகிறது (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து)
e. பனை பழக் கூழ் பயன்படுத்தி ஈரப்பதமூட்டும், அழகை மேம்படுத்தும் முக கிரீம் மற்றும் திட லோஷன் பட்டையை உருவாக்குதல் மற்றும் தரப்படுத்துதல் - பூர்த்தி செய்யப்பட்டது, காப்புரிமைக்கான விண்ணப்பம் இலங்கையின் தேசிய அறிவுசார் சொத்து அலுவலகத்தில் (NIPO) தாக்கல் செய்யப்பட்டுள்ளது (இலங்கை ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்து)

**வெளியீடுகள்/ காப்புரிமைகள்:**

- உணவுக்கான இயற்கையான நிறமூட்டிகளை உற்பத்தி செய்வதற்காக பனை மரக் கூழில் இருந்து நிறமிகளைப் பிரித்தெடுத்தல். சர்வதேச அறிவியல் இதழ்: அடிப்படை மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சி (IJSBAR)

- உணவுக்கான இயற்கையான நிறமூட்டிகளை உற்பத்தி செய்வதற்காக பனை மரக் கூழில் இருந்து நிறமிகளைப் பிரித்தெடுத்தல்.
- ஆய்வுகள் 1, 2 மற்றும் 3 மாநாட்டு நடவடிக்கைகளில் வெளியிடப்பட்டது மற்றும் சர்வதேச இதழ்களில் வெளியிடுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- பனை ஈரப்பதமூட்டும் கிரீம் மற்றும் திட லோஷன் பட்டைக்கான காப்புரிமைக்கான விண்ணப்பம் இலங்கையின் தேசிய அறிவுசார் சொத்து அலுவலகத்தில் (NIPO) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகள் மற்றும் கல்வி வருகைகள்:**

a. ISO 17025:2017 பற்றிய பயிற்சி அநுராதபுரத்தில் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மைக்கான தேசிய நிறுவனத்தில் (NIPHM) (பயிற்சியாளர்: PTB, ஜெர்மனி)
b. பனை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், யாழ்ப்பாணம் (அமைப்பாளர்: PTB, ஜெர்மனி) மூலம் ஐஸ்கிரீம் சோதனை குறித்த பட்டறை.
c. மெண்டலி மென்பொருள் மற்றும் SPSS மென்பொருள் பயன்பாடு பற்றிய பயிற்சி
d. பனை ஆராய்ச்சி நிறுவனத்தை வலுப்படுத்தவும், CRI உடன் ஒத்துழைப்பை உருவாக்கவும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (CRI) வருகை தந்தார்.

**சேவை, கல்வி மற்றும் பொது மக்கள் தொடர்பு**

**கல்வி நடவடிக்கைகள்**

a) ஒரு இளங்கலை ஆராய்ச்சி மாணவர் ஆராய்ச்சியினை மேற்கொண்டார்.
b) ஜெர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் இருந்து உணவுத் தொழில்நுட்ப மாணவர்களுக்கான (NVQ நிலை 5) இரண்டு நாள் நடைமுறை அமர்வு நடத்தப்பட்டது.
c) ஜெர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் மாணவர்களுக்கான உணவுப் பதப்படுத்துதல் (NVQ நிலை 5) குறித்த தொழில்துறை பயிற்சி அமர்வு நடத்தப்பட்டது.
d) இளங்கலை பட்டதாரிகளுக்கு (விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-30 மாணவர்கள்) ஆய்வக பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது.
e) ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் இருந்து உணவு தொழில்நுட்ப மாணவர்களுக்கான (NVQ நிலை 5) ஐந்து நாட்கள் நடைமுறை அமர்வு நடத்தப்பட்டது.
f) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஒரு நாள் நடைமுறை அமர்வு (பயன்பாட்டு விஞ்ஞானம்) நடாத்தப்பட்டது.

## 3. நுண்ணுயிரியல் ஆய்வகம்

**ஆராய்ச்சி சிறப்பம்சங்கள்**

பனையை அடிப்படையாகக் கொண்ட உணவுப் பொருட்கள் நல்ல மருத்துவ மற்றும் சிகிச்சை மதிப்புகளைக் கொண்டிருக்கின்றன, ஆனால் அவை சுவையில் கசப்பானவை என்பதாலும், அவற்றின் முக்கியத்துவத்தை அறிவியல் சான்றுகளுடன் முறையாகப் பொதுமக்களுக்கு எடுத்துச் செல்லாததாலும் அவை பயன்படுத்தப்படாத வளங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. எனவே ஆய்வகம் இந்த வருடத்தில் இந்த சிக்கலை ஆய்வுகள் மூலம் தீர்க்க உத்தேசித்துள்ளது:

a. வாடிக்கையாளர் விருப்பத்தை அதிகரிக்கவும், பனைவெல்லம் இனிப்புச் சாற்றின் ஆயுளை நீட்டிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
b. பனைவெல்லம் காயவைத்து வேகவைத்த கிழங்கு மாவின் ஆயுளை நீட்டிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**வெளியீடுகள்/ காப்புரிமைகள்:**

"பனை உலர்த்திய மற்றும் வேகவைத்த கிழங்கு மாவின் அடுக்கு ஆயுளை நீட்டித்தல்" என்ற ஆராய்ச்சியின் "இலங்கை சொசைட்டி நுண்ணுயிரியலின் (SSM) 9வது வருடாந்திர அறிவியல் அமர்வுகளுக்கு" சமர்ப்பிக்கப்பட்டது.

நேஷனல் சயின்ஸ்/ பவுண்டேஷனின் ஜர்னலுக்கு முழுத் தாள் சமர்ப்பிக்கப்பட்டது ”பனைமரத்தின் உலர்த்தி வேகவைத்த கிழங்கு மாவின் அடுக்கு ஆயுளை நீட்டித்தல்”

பனைவெல்லம் இனிப்புச் சாற்றின் அடுக்கு ஆயுளை நீட்டிப்பதற்கான நடைமுறைக்கான காப்புரிமைக்கான விண்ணப்பம் இலங்கையின் தேசிய அறிவுசார் சொத்து அலுவலகத்தில் (NIPO) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**சேவை மற்றும் மக்கள் தொடர்பு:**
நுண்ணுயிரியல் ஆய்வக நுண்ணுயிரியல் சோதனை தேசிய மற்றும் சர்வதேச தரநிலைகளுடன் தொடர்புடைய உணவு சார்ந்த தயாரிப்புகளிற்கு நடாத்தப்படுகின்றது.

4. **உயிர்வேதியியல் ஆய்வகம்**

**ஆராய்ச்சி சிறப்பம்சங்கள்:**

பின்வரும் ஆய்வுகள் நடாத்தப்பட்டன:

a. இயற்கை புரதம் நிறைந்த ஈஸ்ட் சாறு உற்பத்தி
வெவ்வேறு இடங்களிலிருந்து பெறப்பட்ட கள் மாதிரியிலிருந்து ஈஸ்ட் விகாரங்கள் (55) தனிமைப்படுத்தப்பட்டன. தனிமைப்படுத்தப்பட்ட விகாரங்களில் சிறந்த ஈஸ்ட் திரிபு உருவவியல், உயிர்வேதியியல் பண்புகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டது. நடுத்தர தேர்வுமுறை ஆய்வின் மூலம் ஈஸ்டின் விளைச்சல் அதிகரிக்கப்பட்டது. பின்னர் புரதங்களை பிரித்தெடுப்பதற்காக 24 மணிநேரத்தில் 55°C இல் ஆட்டோலிசிஸ் மேற்கொள்ளப்பட்டது. பிரித்தெடுக்கப்பட்ட புரதம் கோழி தீவன உற்பத்திக்கு பயன்படுத்தப்படும்.

b. வெல்லத்திற்கான பேக்கிங் பொருள் தேர்வு
எட்டு வெவ்வேறு பேக்கேஜிங் பொருட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன் தயிர் கப், டிஸ்போசபிள் லஞ்ச் பாக்ஸில் போர்த்தப்படும் அலுமினிய/ பாயில், வெற்றிடத்துடன் கூடிய 40 மைக்ரான் (M;40) பாலிஎதிலின், வெற்றிடத்துடன் கூடிய 150 மைக்ரான் தடிமன் (M;150) பாலிஎதிலின், M;150 பாலிஎதிலீன், சிலிக்கா ஜெல் கொண்ட M;40 பாலிஎதிலீன், கண்ணாடி ஜாடி. M40 பாலிஎதிலீன் கட்டுப்பாட்டாக பயன்படுத்தப்பட்டது. பனை வெல்லத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட இரசாயன மற்றும் நுண்ணுயிர் பண்புகள் இரண்டு வார இடைவெளியில் 10 வாரங்கள் வரை கண்டறியப்பட்டது. மேற்கூறிய பொருட்களில் M150 வெற்றிட பாலிஎதிலீன் மற்றும் கண்ணாடி ஜாடி ஆகியவை வெல்லத்திற்கான சிறந்த பேக்கிங் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, ஏனெனில் சர்க்கரை மற்றும் வெல்லத்தின் நிறத்தை குறைப்பதில் குறைந்த மாற்றங்கள் மற்றும் பாக்டீரியா வளர்ச்சியை கட்டுப்படுத்துகிறது.

**வெளியீடுகள்:**

a) யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்தப்படும் ஐஸ்கிரீம்களின் நுண்ணுயிரியல் தரம்
SSM – 2019 இன் 8வது வருடாந்திர மாநாட்டின் சுருக்கம் மற்றும் அறிவியல் அமர்வுகள், தொகுதி 07, p 36.

b) ஊவா வெல்லஸ்ஸா பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டின் பனை வெல்லப்பாகுகளிலிருந்து பயோஎத்தனால் உற்பத்திக்கான நொதித்தல் ஊடகத்தை மேம்படுத்துதல்.

**சேவை மற்றும் மக்கள் தொடர்பு:**

a. பனை மேம்பாட்டுச் சங்கங்களுக்கு பணம் செலுத்தி களப் பார்வையிட்டு, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தரத்தை மேம்படுத்த உதவுதல்.

b. பனை சார்ந்தவர்களுக்கு (கூழ், பிஸ்கட், இனிப்பு கள், முதலியன) பயிற்சிகள் வழங்கப்பட்டது.

**செயற்பாட்டு பெறுபேறுகளின் மீளாய்வு**

| **விபரம்** | 2019 | 2018 |
|---|---|---|
| விற்பனை புரள்வு | 43,383,448.80 | 50,258,061.88 |
| விற்பனை இலாபம் | 8,914,129.86 | 10,040,000.02 |
| ஏனைய வருமானம் | 10,008,924.30 | 3,613,885.80 |
| இலாபம (நட்டம்) | (79,121,047.91 | (75,896,207.24) |
| தேய்மானம் தவிர்ந்த இலாபம் (நட்டம்) | (35,563,737.26) | (34,341,607.16) |
| **அரச பங்களிப்பு** | | |
| மீண்டுவரும் | 121,000,000.00 | 119,996,000.00 |
| மூலதனம் | 25,330,000.00 | 34,175,000.00 |
| உத்தியோகத்தர் எண்ணிக்கை | 207 | 215 |

**நிதியியல் மீளாய்வு**

| **நிதியியல் மீளாய்வு** | 2019 | 2018 |
|---|---|---|
| வருடத்திற்கான ஆரம்ப மிகுதி | 1,353,440.50 | 2,517,077.83 |
| **பணக்கொடுப்பனவற்ற அசைவு** | | |
| ஒதுக்கீடு சரிசெய்தல் வருமானம் | (4,001,818.91) | |
| தேய்மானம் | 43,557,310.65 | 41,554,600.13 |
| கடன்பட்டோர்களின்அதிகரிப்பு/ குறைவு | (191,005.29) | (2,306,322.83) |
| கையிருப்பின் அதிகரிப்பு/ குறைவு | 5,132,556.17 | 1,355,854.77 |
| கடனாளர்களின் அதிகரிப்பு/ குறைவு | 13,162,368.28 | 9,061,549.62 |
| பண்டிகை முற்பண அதிகரிப்பு | (13,750.00) | |
| நிலையான சொத்துக்கள் அகற்றிய இலாபம் | (365,202.99) | |
| அகற்றுவதால் பெற்ற வருமானம் | 645,200.83 | |
| பணியாளர் கடன் குறைப்பு | 121,919.93 | |
| | **58,047,578.67** | **49,665,681.69** |
| | **59,401,019.17** | **52,182,759.52** |
| **உட்பாய்ச்சல்** | | |
| விற்பனைப் புரள்வு | 43,383,448.80 | 50,258,061.88 |
| ஏனைய வருமானம் | 10,008,924.30 | 3,613,885.80 |
